20 அக்டோபர் 2024
பொதுக்காலம் ஆண்டின் 29 ஆம் ஞாயிறு
(தூதுரைத்தல் ஞாயிறு)

NEW WAY OF BEING CHURCH
newbec+

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)



மாதாந்திர கருப்பொருள்
ஆயர் மாமன்றத்தை நோக்கிப் பகிரப்பட்டப் பணி

# சிலுவையில்லாமல் மாட்சி இல்லை

இயேசுவின் நெருங்கிய சீடர்களான யாக்கோபு மற்றும் யோவானும் அவரை அணுகிச்சென்று, இயேசு அவருடைய மாட்சிமிக்க அரசுக்குள் நுழையும்போது அவர்கள் இருவருக்கும் உயர்ந்த இடத்தைக் கேட்கிறார்கள். அவர்கள் கேட்பது அப்பாவித்தனமாக இருந்தாலும், தாங்கள் கேட்பது என்னவேன்றும் அவர்களின் கோரிக்கையின் தாக்கம் என்னவென்றும் அவர்கள் அறியாதிருந்தனர். அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம், இயேசு அவர்கள் மீது மிகவும் அன்பாயிருக்கின்றார் என்பது மட்டும்தான். அவர்களுக்கு மூன்று முக்கியமான கருத்துகளை நினைவுபடுத்துவதன் மூலம் இயேசு பதிலளிக்கிறார்.

முதலாவது அரசுரிமையில் உரிமை வேண்டுமென்றால் துன்பத்திற்கு தயாராயிருக்கவேண்டும். இயேசுவின் மாட்சியில் பங்குபெற அதற்கு ஒருவிலை உண்டு. “கிண்ணம்” “திருமுழுக்கு” ஆகிய சொற்கள் துன்பத்தையும் மரணத்தையும் குறிப்பிடுகிறது. கெத்சமனி தோட்டத்தில் இயேசு “இத்துன்பக்கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும்” (லூக் 22: 42-224) என்று தந்தையிடம் இறைவேண்டுதல் செய்கிறார். “திருமுழுக்கு” என்பது தண்ணீரில் மூழ்கிஎழுவது அல்லது மூழ்குவது. யாக்கோபு மற்றும் யோவான் இருவரும் இயேசுவை எல்லா வழிகளிலும் பின்பற்றுவதன் முழு தாக்கத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாரா?

இரண்டாவது, அவர்கள் அவ்வாறு ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருந்தாலும், வரவிருக்கும் அரசுரிமையில் ஒரு நபரின் நிலையை தீர்மானிப்பது இயேசுவின் விருப்பமல்ல; அந்த முன்னுரிமை தந்தைக்கே உரியது. அடிப்படையில் இயேசு கூறுகிறார்: நீங்கள் என் சிலுவையை ஏற்றுக்கொள்ள விரும்பினாலும் உங்களுக்கான நிலையை அருளுவது என் தந்தையின் விருப்பமே. யாக்கோபு, யோவான் இருவரும் இயேசுவின் மாட்சிமையில் பங்கு கேட்க வந்தார்கள். ஆனால் இயேசு அவர்களுக்கு சிலுவையைத் தான் கொடுக்கிறார். அவர்களின் கவனத்தை மாட்சியிலிருந்து துன்பத்திற்கும் மரணத்தின் இயல்பு நிலைக்கும் திருப்புகிறார். மாட்சியைப் பெறவேண்டுமென்றால் தன்னைப் பின்பற்றுவதை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்ளும்படி இயேசு அவர்களுக்கு சவால் விடுக்கிறார்.

மூன்றாவதாக, கிறிஸ்துவ தலைமைத்துவம் என்பது பிறருக்குப் பணி செய்வது. உண்மையான தலைமைத்துவம் என்பது பிறர் மீது கொண்டுள்ள “அதிகாரம்”அல்ல. ஆனால் பிறருக்காக நம் வாழ்வை கொடுப்பதன்மூலம் வரையறுக்கப்படுகிறது.

மற்ற பத்து சீடர்களும் யாக்கோபு யோவான் இருவர்மீதும் கோபம்கொண்டனர். நாமும் அவர்களைப் போலவே “அவர்கள் எவ்வளவு சுயநலவாதிகள்” என்ற உணர்வைக் கொண்டிருக்கக்கூடும். ஆனால் நாமும் கூட நாம் “நல்ல” கிறிஸ்துவர்கள் அல்லது திருஅவையில் “துடிப்பான” உறுப்பினர்கள், ஆதால் நமக்கும் இதுபோன்ற சலுகைகள் தரப்படவேண்டும் என்று கருதுவதில்லையா? சிலுவை இல்லாத “மாட்சியை” விரும்பிய தருணங்களை நாமும் அனுபவித்திருக்கிறோமா?

இயேசு தம்மைப் பின்பற்றும் அனைவரையும் தம் சிலுவையை சுமந்துகொண்டு பிறருக்குப் பணிசெய்யும்படி அழைக்கிறார் என்பதை இன்றைய நற்செய்தி வாசகம் நமக்கு நினைவூட்டுகிறது. ஒரு கிறிஸ்துவன் பணியாளனாக இருக்கவேண்டும். பெரியவனாக இருப்பது என்பது அனைவரின் தேவைகளை இயேசுவைப் போல் நிறைவுசெய்பவராக இருக்கவேண்டும். மேலும் இறைவனின் அரசில் நாம் எவ்வாறு “வெகுமதி பெறுவோம்” என்பதை தீர்மானிப்பது கடவுளின் தனிச்சிறப்பு.

ஒவ்வொரு உள்ளூர் தலதிருஅவையும் அதனுடைய ஆர்வத்தை மதிப்பீடு செய்யவும், ஆன்மீக மற்றும் மேய்ப்புப்பணி பொறுப்புகளுக்குப் புதிய உற்சாகத்தை கண்டறிவதற்கும், தூய ஆவியானவர் கடவுளின் மக்களுக்கு என்ன சொல்கிறார் என்பதை பிரதிபலிக்க இதுவே தக்க நேரம்.

திருத்தந்தை 2 ஆம் ஜோன் போல்




### இன்றைய இறைவார்த்தை:

எசாயா 53: 10-11

திபா: 33: 4-5, 18-20, 22

எபிரேயர்: 4: 14-16

மாற்கு 10: 35-45 (அ) 10: 42-45



**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org